பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி22 வியாழக்கிழமை 05.06.2025 கதிர் 208

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்று சங்கு - சைக்கிள் கூட்டணி நேற்று ஒரு விடயத்தில் மூக்குடைபட்டுப்போனது. தம் முடையது கொள்கைக் கூட்டு என்று அறிவித்த இவர்கள், மக்களை ☞ 2

# செம்மணிப் புதைகுழியில் மேலும் பல எலும்பு எச்சங்கள் வரலாம் என அச்சம்

செம்மணி, சிந்துப்பாத்திபுதைகுழியில் மேலும் பலரது மனித எச்சங்கள் ஒன்றின் கீழ் ஒன்றாகப் போடப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டு ள்ளது. அதனால் பொறுமையாகவும் மெதுவாகவும் அகழ்வாய்வு தர நிர்ணயங்களுக்கு அமையவும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. நேற்று புதிதாக 6 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கண்டுபிடிக்கப்படும்மனிதஎச்சங்களில் பல சிறுவர்களுடையவை என்று சந்தேகிக்கப்படுவதால், குடும்பம் குடும்பமாக அவர்கள் அங்கு புதைக்கப்பட்டிருப்பார்களோ என்கிற அச்சமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. மீட்கப்படும் மண்டையோடுகளில் அடி காயங்கள் காணப்படுவதுடன் ☞ 6





## வர்த்தமானி திரும்பப் பெறப்படவில்லை

# போராட்டத்தை தவிர வேறு தெரிவு இல்லை

## தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

ஆளும்தரப்பினால் வடக்கிலுள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ள நிலையில், இன்னமும் அதற்குரிய வர்த்தமானி பிரசுரிக்கப்படவில்லை. இரத்துச்செய்வது குறித்த வர்த்தமானி அறிவித்தல் உடனடியாக வெளியிடப்படாவிடின், ஒத்திவைக்கப்பட்ட சட்டமறுப்புப் போராட்டத்தை ஆரம்பிப்பதைத் தவிர தமக்கு வேறு தெரிவுகள் இல்லை என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் எச்சரித்துள்ளார்.

வட மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமைகோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என ஆளும்தரப்பின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கடந்த ☞ 2

## நீதி அமைச்சருக்கு ஒருநாள் கைதி உடை அணிவிப்போம்

### பதுளை மாவட்ட எம்.பி. எச்சரிக்கை

நீதிமன்றத்தை அவமதித்துள்ள நீதியமைச்சருக்கு என்றோவொருநாள் கைதி உடை (ஜம்பர்) அணிவிப்போம். 'புத்தம் சரணம் கச்சாமி' என்று ஆளும்தரப்பு துதிப்பாடிக் கொண்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை கட்டிப்பிடித்துக் கொண்டுள்ளது. ஆணைக்குழுவும் ஆளும்தரப்புக்கு ஏற்றாற்போல் செயற்படுகிறது. எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கு ஜம்பர் அணிவிக்க வேண்டுமாயின் குரங்கு அமைச்சர், நீதியமைச்சர், போலி கலாநிதி பட்டம் சமர்ப்பித்த முன்னாள் சபாநாயகருக்கும் ஜம்பர் அணிவிக்க வேண்டும் என புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் ஆளும் தரப்பை கடுமையாக சாடினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ☞ 6

## குச்சவெளி துப்பாக்கிச் சூடு குறித்து முழுமையான விசாரணை வேண்டும்

### இம்ரான் எம்.பி. வலியுறுத்து

குச்சவெளி மீனவர் மீது துப்பாக்கி சூடு நடத்தும் அனுமதியை கடற்படைக்கு வழங்கியது யார்? இதுதொடர்பில் முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும். அதேவேளை, சுருக்கு வலைக்கான அனுமதிப்பத்திரம் காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை போன்ற பிரதேசங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிலையில் வடக்கு, கிழக்கில் மட்டும் இதற்கு ஏன் தடை என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுபுதன்கிழமை நடைபெற்ற 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு ☞ 2

## எதிர்க் கட்சி உறுப்பினர்களின் பொய்கள் மீது சட்ட நடவடிக்கை

### பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் எச்சரிக்கை

எதிர்க்கட்சிகள் குறிப்பிடும் பொய்கள் சமூகமயமாக்குவதற்கு இனி இடமளிக்கப் போவதில்லை. குறுகிய நேரத்துக்குள் பதிலளிக்கப்படும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிடும் பொய்களுக்கு இனி மன்னிப்பு வழங்கப்படமாட்டாது. உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ☞ 6

## பொருளாதார மீட்சிக்காக எடுக்கப்படும் திட்டங்களில் ஆளும்தரப்புக்கு ஆதரவு

### கஜேந்திரகுமார் நேற்று நாடாளுமன்றில் அறிவிப்பு

அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் கடந்த ஆளும்தரப்புகள் மீது குற்றம் சுமத்திக்கொண்டு, பழைய கதைகளையே பேசிக்கொண்டிருக்காது, தமது வேலைத்திட்டங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை ஆளும்தரப்பு உருவாக்க வேண்டும். பொருளாதார மீட்சிக்கு எடுக்கும் சிறந்த திட்டங்களுக்கு ஒத்துழைப்போம் என்று தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

சபையில் எனக்கு முன்னர் உரையாற்றிய உறுப்பினர் ஒருவர், இந்த ஆளும்தரப்பு நாட்டின் முஸ்லிம் மக்களுடனும், பலஸ்தீன மக்களுடனும் உறுதியாக இருப்பதாக ☞ 2

### குச்சவெளி துப்பாக்கிச் சூடு:

## கடற்படையிடமே விசாரணை அறிக்கை கோரும் அமைச்சர்

திருகோணமலை, குச்சவெளி சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுத்து கூடிய விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்படையினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் சந்திரசேகரனால் குறித்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே சம்பவம் தொடர்பில் முடிவொன்றுக்கு வரமுடியும் எனவும், அடுத்தக்கட்ட நடவடிக்கையை முன்னெடுக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

திருகோணமலை, குச்சவெளி ☞ 6

## செம்மணிப் புதைகுழி விசாரணைக்கு தேவையான நிதி ஒதுக்கீடு தரப்படும்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும், அதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற ☞ 2

## ரம்புக்வெல செய்தார் என்ற குற்றத்தைவிட ஜேவிபி செய்வது மிகப் பெரும் மோசடி

### தயாசிறி எம்.பி. நாடாளுமன்றில் காட்டம்

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தனது சேவையாளர்களின் சம்பளத்தை பொது வங்கிக் கணக்கில் வைப்பிட்டு அதனைப் பகிர்ந்தளித்தமை குற்றம் என்று குறிப்பிடப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாத சம்பளம் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி நிதியத்துக்கு செல்கிறது. நிதியத்தின் ஊடாகவே சம்பளம் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஏமாற்ற முயற்சிக்கிறார்கள், இவர்களுக்கு இடையில் ஏற்பட்டிருப்பது உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைப் பிடிப்பதற்கான அரசியல் கூட்டு மட்டும்தான் என்பதைத் தொடக்கத்தில்இருந்தேசொல்லிவருகின்றேன். அதை நிரூபிக்கும் வகையில் நேற்று ஒரு சம்பவத்தைச் செய்தது இந்தக்கூட்டு.

இந்தக் கூட்டால் வடக்கு கிழக்கில் ஒரேயொரு உள்ளூராட்சி சபையில்கூட அதிகாரத்தைப் பிடிக்க முடியாது என்பதை நேற்றே தெரிவித்திருந்தேன். அதிகாரத்தைப் பிடிக்கக்கூடிய பெரும்பான்மை ஆசனங்கள் ஒரு சபையில்கூட இந்த இரு தரப்புக்களும் சேர்ந்த பின்னும் கிடையாது. அதனால் ஈபிடிபியின் ஆதரவைப் பெற இந்தக் கூட்டின் தலைவர்களில்ஒருவரானபுளொட்சித்தார்த்தன் ஈபிடிபியின் தலைவர் சித்தார்த்தனைச் சந்திக்க நேரம் கேட்டிருந்தார்.

இந்தச் செய்தி ஊடகம் ஒன்றில் நேற்றுக் காலையில் வெளியாகி இருந்த து. அதனை காலையிலேயே பொய்ச் செய்தி (Fake news) என்று தனது முகப் புத்தகத்தில் மறுத்திருந்தார் கஜேந்திரகுமார். அதைத் தொடர்ந்து வழக்கம் போன்று அவரின் சமூக ஊடக தீவிர விசுவாசிகள் இந்த விடயத்தை அறம்புறமாகக் காவித் திரிந்தார்கள். வசைபாடினார்கள், வழக்கம்போன்றேஎல்லா சில்மிசங்களையும் செய்தார்கள். ஆனால் பிற்பகலில் அந்தச் செய்தி உண்மைதான், அதை நான்தான் அந்த ஊடகத்திற்குத் தெரிவித்தேன் என்று டக்ளஸ் தேவானந்தா உண்மையைப் போட்டுடைத்துவிட்டார். சித்தார்த்தன் எனது நல்ல நெருங்கிய நண்பர், அவர் சந்திக்கவேண்டும் என்று கேட்டார், நான் சம்மதித்தேன் என்று டக்ளஸ் தெரிவித்தார். டக்ளஸின் அறிக்கை வந்த பின்னரும் கஜேந்திரகுமார் தனது 'பொய் செய்தி' பதிவை நீக்கவில்லை என்பது மட்டுமல்லகொள்கைக்கூட்டிலிருந்துவெளியே குதித்ததானசெய்தியையும்வெளியிடவில்லை என்பது கவனத்திற்குரியது.

இதன் மூலம் இந்தச் சந்திப்பு தனக்குத் தெரியாமலேயே நடக்க இருந்தது என்பதைப் போன்று தனது ஆதரவாளர்களை நம்ப வைப்பதற்கு ஒரு நாடகம் போட்டார் என்பது மட்டும் தெளிவாகின்றது. உண்மையில் தனக்குத் தெரியாமல் அந்தச் சந்திப்புக்கு சித்தார்த்தனால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்குமானால் இவ்வளவும் கொள்கைக் கூட்டிலிருந்து குப்புறக் கவிழ்ந்திருப்பார் கஜேந்திரகுமார். எனவே அவரது போடுவது வெறும் நாடகம்தான் என்பது வெளிச்சம்.

எப்படியிருந்தாலும் டக்ளஸ் - சங்கு - சைக்கிள் கூட்டு சந்திப்புக் குறித்த செய்திகள் வெளியாகி கஜேந்திரகுமாரினதும் கஜேந்திரனதும் புனிதக் கருத்துருவாக்கம் மீது கடுமையான கேள்விகள் எழுப்பப்பட்டதை அடுத்து எழுந்த அழுத்தம் காரணமாக இந்தச் சந்திப்பை கடைசியில் ஒத்தி வைத்துவிட்டார் சித்தார்த்தன். அதையும் டக்ளஸ் தேவானந்தாவே தெரிவித்தார். இன்றைக்குச் சந்திக்க் கூடிய சூழல் தனக்கு இல்லை என்பதால் நாளை சந்திப்போம் என்று நண்பர் சித்தார்த்தன் தெரிவித்தார், நானும் சரி என்றேன் என்று தெரிவித்திருந்தார் டக்ளஸ்.

அதற்குள்ளும் பொடி வைத்து ஒரு குசும்பு பண்ணியிருந்தார் அவர், கடந்த காலங்களில் நட்பு ரீதியாக, அரசியல் ரீதியாக அல்ல, சித்தார்த்தன் போன்ற நண்பர்கள் கேட்டபோது நான் அவர்களுக்கு ஆதரவளித்திருக்கின்றேன், அதனால் இன்றைய சந்திப்பு நடக்காதது நல்லதுதான் என்று எனக்குள்ளேயே நினைத்துக் கொண்டேன் என்றார் அவர். அதாவது சித்தார்த்தன் கடந்த காலத்தில் கூட்டமைப்பில் இருந்தார் அப்போது அவர் கேட்டபோது நட்பு ரீதியில் யாழ். மாநகர சபை போன்ற இடங்களில் அவர்களுக்கு ஆதரவளித்தேன். ஆனால் இப்போது அவர் கேட்டால் எப்படி ஆதரிக்க முடியும், அதனால் அவரது சந்திப்பு நடக்காததும் நல்லதுதான் என்று டக்ளஸின் கருத்தை 'டிகோர்டிங்'செய்ய முடியும். அப்படியென்றால் சங்கு - சைக்கிள் கூட்டணிக்கு ஆதரவளிக்கும் எண்ணம் டக்ளஸிடம் இல்லை என்று இதனை எடுத்துக்கொள்ளலாம். கரடியே காறித் துப்பிய தருணம் என்று வேண்டுமானாலும் வடிவேலு பாணியில் இதனைச் சொல்லலாம்.

ஒட்டுமொத்தத்தில் இந்த விடயத்தில் பொய்ச் செய்தி என்று விடயத்தைப் பிரபலப்படுத்தி பின்னர் அதுவே பொய்தான் என்று நிரூபணமாகி மூக்குடைபட்டுக் கொண்டார் கஜேந்திரகுமார்.

சித்தார்த்தன் பேசியதன் பின்னர் அன்றிரவே தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானமும் தன்னைச் சந்தித்துப் பேச நேரம் கேட்டு குறுஞ்செய்தி அனுப்பி இருந்தார் எனவும் தான் தயார் என்று சொன்னதை அடுத்து, வியாக்கிழமை சந்திக்கலாம் என்று பதிலளித்திருந்தார் என்றும் டக்ளஸ் தெரிவித்தார். தமிழ் அரசுக் கட்சி இதற்கு முன்னரேயே டக்ளஸுடன் பேசி இருக்கும். ஆனால், டக்ளஸ் இப்படி தாங்கள் பேசினோம் என்பதையே வெளியே கூறி தனக்கு அரசியல் இலாபம் தேடிக் கொள்வார் என்கிற அச்சம் காரணமாகவே பேசாமல் பதுங்கி இருந்தது எனலாம். டக்ளஸிடம் இந்தப் பண்பியல்பு நீண்ட காலமாகவே இருக்கிறது. மற்றைய கட்சித் தலைவர்கள் தன்னுடன் பேசினார்கள் என்பதை வெளியே சொல்வதன் மூலமும் தன்னிடம் ஆதரவு கேட்டார்கள் என்று வெளிப்படுத்துவதன் மூலமும் தனக்கு அரசியல் ஆதாயம் தேடிக்கொள்வது அவரது இயல்பு. அரசியல் நாகரிகம் இன்றி இந்த விடயத்தில் அவர் நடந்துகொள்கிறார் என்பது மற்றைய அரசியல் தலைவர்களின் கருத்து. இப்போது டக்ளஸிடம் பேசப் போனால் அதை அவர் வெளியே சொல்ல தேவையற்ற சர்ச்சை வரும் என்பதால்தான் தமிழ் அரசுத் தலைவர் பேசாமல் இருந்தார் என்று சொல்ல லாம். சித்தார்த்தன் டக்ளஸை நாடிவிட்டார் என்பது தெரிந்த பின்னர், இனித் தங்களுகளை விமர்ச்சிப்பதற்கு ஆளில்லை, டக்ளஸ வெளியே சொன்னாலும் அதனால் பாதிப்பில்லை என்று தமிழ் அரசுத் தலைவர் கருதியிருப்பார் போலும், அதனால் துணிந்து டக்ளஸிற்கு தகவல் அனுப்பியிருக்கிறார்.

இன்று சிவஞானத்திற்கும் டக்ளஸிற்கும் இடையிலான சந்திப்பு நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் மாநகர சபையில் டக்ளஸ் ஆதரித்தாலும்கூட ஆட்சியமைப்பதற்கு வேண்டிய பெரும்பான்மையை தமிழ் அரசுக் கட்சியால் பெற முடியாது என்கிற உண்மையும் ஒன்றுண்டு. மற்றைய சபைகளில் டக்ளஸிற்கு பெரிதாக உறுப்பினர்கள் எண்ணிக்கை இல்லை என்பதால் மாநகர சபை மட்டுமே இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. .

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## போராட்டத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மார்ச்மாதம்28ஆம்திகதிபிரசுரிக்கப்பட்ட2430 இலக்கவர்த்தமானியில்குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும்அவ்வர்த்தமானிஅறிவித்தலை முழுமையாகத் திரும்பப் பெறவேண்டும் எனக்கோரி வலுப்பெற்ற எதிர்ப்பை அடுத்து, அவ்வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதனை இரத்துச்செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போதுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் காணி தொடர்பான வர்த்தமானிஅறிவித்தலைஇரத்துச்செய்வதாக ஆளும்தரப்பு அறிவித்திருப்பதன் காரணமாக மே 28க்குப் பின்னர் வடக்கு கிழக்கில் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த பெரும் சட்டமறுப்புப் போராட்டம் மற்றும் கடையடைப்பை ஒத்திவைப்பதாகவும், இரத்துச்செய்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெகுவிரைவில் வெளியிடப்படாவிடின், அப்போராட்டம் முழுவீச்சில் முன்னெடுக்கப்படும் எனவும் சுமந்திரன் ஏற்கனவே எச்சரித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுபற்றி நேற்று புதன்கிழமை கருத்து வெளியிட்டுள்ள சுமந்திரன், 'காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பிரசுரித்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வதாக கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆளும்தரப்பு அறிவித்தது. நாம் விதித்த காலக்கெடுவுக்கு முன்னைய நாள் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் ஒருவாரம் கடந்தும், இன்று வரை அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. வர்த்தமானி அறிவித்தல் உடனடியாக வெளியிடப்படாவிடின், சட்டமறுப்புப்போராட்டத்தை ஆரம்பிப்பதைத் தவிர எமக்கு வேறு தெரிவுகள் இருக்காது' எனத் தெரிவித்துள்ளார்.

## குச்சவெளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

குச்சவெளியில் செவ்வாய்க்கிழமை துப்பாக்கிச்சூடு நடந்துள்ளது. மீனவர்களுக்கிடையிலான பிரச்சினையாகக் காணப்பட்ட நிலையில் அது துப்பாக்கி சூட்டில் முடிந்துள்ளது. இதில் ஓர் இளைஞன் காயமடைந்துள்ளார். குச்சவெளி ஜாஜா நகர் பிரதேசத்தில் பள்ளிமுனை பிரதேசத்தில் காணப்படுகின்ற அய்யூப்கான் ஜனூஸ் என்று சொல்லப்படுகின்ற 23 வயது .இளைஞனே காயமடைந்துள்ளார்.

இந்த மீனவர்களின் பிரச்சினைகளை நாம் இங்குள்ள அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். அதனடிப்படையில் கடற்தொழில் திணைக்களத்தால் முறையாக வழங்கப்பட்டுள்ள சுருக்குவலை அனுமதிப்பத்திரம் பெற்ற மீனவர்கள் தாக்கப்பட்டுள்ள இந்த சம்பவம் கண்டிக்கத்தக்கது.

இந்த சுருக்குவலை அனுமதிப்பத்திரத்திலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த 7 மைல் நிபந்தனை தான் பிரதான காரணமாகவுள்ளது. இந்த நிபந்தனை திருகோணமலை மாவட்டத்தைப்பொறுத்தவரை குடாப்பகுதிகளுக்கு பொருத்தமற்ற நிபந்தனையாக காணப்படுகின்ற காரணத்தினால்தான் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

முஸ்லிம்கள் ஹஜ்ஜுப்பெருநாளை எதிர்கொள்கின்ற இந்த நேரத்தில் அந்த பிரதேசத்தில் இருக்கின்ற மீனவர்கள் வருமானத்தை ஈட்டிக்கொள்கின்ற வகையில் கடலுக்கு செல்கின்ற நிலையில், இவர்கள் தீவிரவாதிகளாக,போதைப்பொருளை கடத்துபவர்களாக கருத்தில்கொண்டு தாக்கப்பட்டுள்ளார்கள். எனவே இந்த தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்த மீனவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்வதற்கான அனுமதியை கடற்படையினருக்கு யார் கொடுத்தது? இந்த துப்பாக்கி பிரயோகத்தால் உயிரிழப்பு ஏற்பட்டிருக்குமானால் நிலைமை என்ன?முன்னர் இந்த நிபந்தனையை மீனவர் மீறினால் கடற்படையினர் பொருட்களை பறிமுதல் செய்வார்கள்.எச்சரிப்பார்கள். ஆனால் இன்று துப்பாக்கி சூடு நடத்தும் நிலைக்கு வந்துள்ளார்கள் இந்த சம்பவம் அந்தப்பிரதேசத்தில் இனவாதமாகவே பார்க்கப்படுகிறது.

சுருக்குவலைக்கான இந்த அனுமதிப்பத்திரம் காலி,அம்பாந்தோட்டை,மாத்தறை போன்ற பிரதேசங்களில் பயன்படுத்தப்படுகின்றது.ஆனால் இதனை வடக்கு,கிழக்கில் பயன்படுத்துகின்றபோது இந்த அனுமதிக்கு தடை என்ற நிலைப்பாடு காணப்படுகிறது. நாட்டிலே சுருக்கு வலைக்கு தடை என்றால் நாடு முழுவதும் தடை செய்யப்பட வேண்டும். ஆனால் பிரதேச ரீதியாகவே தடை செய்யப்படுகின்றது.அதனால்தான் இதனை இனவாதமாக பார்க்க வேண்டியுள்ளது என்றார்.

## ரம்புக்வெல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிர்ந்தளிக்கப்படுகிறது. இது மிகப்பெரிய மோசடியாகும். தொன் கணக்கில் இவர்கள் பொய்யுரைத்து விட்டு தற்போது பிறரை பொய்யர்கள் என்று விமர்சிக்கிறார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் எதிர்ப்பு சட்டத்தை கடந்த ஆளும்தரப்புதான் இயற்றியது. ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளை பேச்சளவில் மாத்திரம் குறிப்பிட்டுக்கொண்டிருக்காமல் செயலளவிலும் காண்பித்துள்ளோம். எவ்விதமான பரிசோதனைகளுமின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றி பல விடயங்களை குறிப்பிட்டுள்ளோம்.

கடந்த ஜனவரி மாதமளவில் நாட்டில் ஏற்பட்ட கொள்கலன் சிக்கலுக்கு தீர்வு காணும் பொருட்டு அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு மாத்திரமே இந்தக் குழுவுக்குப் பணிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க சட்டவிரோதமான முறையில் 323 கொள்கலன்களை விடுவித்தார்.

சட்டவிரோதமான முறையில் 323 கொள்கலன்களை விடுவித்த பிமல் ரத்நாயக்க வெளியில் உள்ளார். அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆனால் முறைப்பாடளித்தவர்களை விசாரணை செய்ய குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு முன்னிலையாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தனது சேவையாளர்களின் சம்பளத்தை பொது வங்கி கணக்கில் வைப்பிட்டு அதனை பகிர்ந்தளித்தமை குற்றம் என்று குறிப்பிடப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதச்சம்பளம் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி நிதியத்துக்கு செல்கிறது. நிதியத்தின் ஊடாகவே சம்பளம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற சிறப்புரிமை சட்டத்தின் 11 ஆம் பிரிவில் ' நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அரசியல் கட்சி நிதியத்தில் வைப்பிலிடுவது ஆகாது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே 159 உறுப்பினர்களின் மாத சம்பளம் மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி நிதியத்துக்கு செல்வது பாரியதொரு மோசடியாகும்.

தேசியமக்கள்சக்தியின்சார்பில் இம்முறை உள்ளூராட்சிமன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 3296 உறுப்பினர்களுக்கு மாதம் 21 ஆயிரம் ரூபாய் அளவில் சம்பளம் வழங்கப்படுகிறது. 3296 உறுப்பினர்களின் சம்பளம் கட்சியின் நிதியத்துக்கு செல்கிறது. கெஹெலிய ரம்புக்வெல்லவின் செயற்பாடு குற்றமாயின் இது எவ்வகையான குற்றம் என்பது விளங்கவில்லை.

வடமேல் மாகாணத்தில் அரச வாகனம் விற்கப்பட்டமை தொடர்பில் குறிப்பிட்ட விடயத்தில் தவறு உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். பொய்யை நான் உண்மை என்று தொடர்ந்து அழுத்தமாக திரிபுப்படுத்தவில்லை. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரிசி மாபியா உள்ளது என்றார். ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அரிசி மாபியா இல்லை என்றார்.

ஆளும்தரப்பின் உறுப்பினர் கொட்டாச்சிகே உகண்டா நிதி பற்றி பேசினார். ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பொய் சொல்வது ஜனநாயக உரிமை என்றார். இல்லாத கலாநிதி பட்டத்தை இருப்பதா க சொன்னீர்கள், 12 இலட்சத்துக்கு கார் வழங்க முடியும் என்றார்கள்;, பின்னர் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றீர்கள், தொன் கணக்கில் பொய் சொல்லி விட்டு தற்போது இல்லை என்கின்றீர்கள், குறைகளை சுட்டிக்காட்டுபவர்களை பொய்யர்கள் என்கின்றீர்கள் என்றார்.

## செம்மணிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் கஜேந்திரகுமார் செம்மணி மனித புதைகுழி தொடர்பில் முன்வைத்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:,

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார முன்வைத்த விடயம் தொடர்பில் விசேட கவனத்தை செலுத்தியுள்ளதுடன், இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், துரிதமாக விசாரணைகளும் முன்னெடுக்கப்படும்.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்கின்றேன். அதன்படி இது தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் அறிவிக்கின்றேன் என்றார்.

## பொருளாதார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார். இவ்விடத்தில் நான் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுகின்றேன். அதாவது தமிழ் மக்களும் பலஸ்தீன மக்களுக்கு எதிரான இனவழிப்புக்கு எதிராக அவர்களுடன் ஒன்றாக இருக்கின்றோம் என்பதனை கூறுகின்றோம். இதனை கூறுவதால் நாங்கள் யூதர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்களுக்கு எதிராகவும் இனப்படுகொலை நடந்துள்ளது. அவர்களுக்கும் நியாயம், நீதி மற்றும் பாதுகாப்பு அவசியமாகும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் யூதர்கள் என்ற பெயரில் இன்று இஸ்ரேல் ஆளும்தரப்பு பலஸ்தீன மக்களுக்கு எதிராக முன்னெடுக்கும் இனவழிப்பை எதிர்க்க வேண்டிய கடமை நீதி நியாயத்தை விரும்பும் எந்தவொரு இனத்திற்கும் மனிதர்களுக்கும் இருக்கின்றது என்பதனை சுட்டிக்காட்டுகின்றேன்.

ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஒழுங்கு விதிகள்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# கட்சிகளுக்கு வரும் நிதி தொடர்பில் விசாரிக்க எந்த நிறுவனமும் இல்லை

## கோடீஸ்வரன் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு

ஊழல் எதிர்ப்பு விடயத்தில் விசேட பிரேரணை ஆளும்தரப்பு கொண்டு வர வேண்டும். தனி நபர்கள் சட்டவிரோத சொத்துக்களை சேர்த்தல், நாட்டுக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இது நியாயமானதே. அதேபோன்று அரசியல் கட்சிகளுக்கு வருகின்ற நிதி தொடர்பாகவும், அந்த நிதி எங்கிருந்து வருகின்றது, அது எப்படி பயன்படுத்தப்படுகின்றது என்று விசாரணைகளை முன்னெடுக்க எந்தவொரு நிறுவனமும், செயற்பாடும் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக இந்த ஆளும்தரப்பால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்ட மூலத்தை நாங்கள் பாராட்டுகின்றோம். குறிப்பாக இந்த நாட்டில் ஊழல் தற்போதும் நடைபெற்றுவருகின்றது. சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளும் தற்போது நாட்டில் நடக்கின்றன. விசேடமாக போதைப் பொருள் விற்பனை நடக்கின்றன. மாணவர்களை அழிக்கும் நோக்கில் போதைப் பொருட்களை விற்பனை செய்கின்றனர். இவ்வாறான விற்பனையுடன் தொடர்புடையவர்கள் மற்றும் தரகர்களை இணங்கண்டு அவர்களுக்கு எதிராக ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதைப்பொருள் விற்பனைக்கு உடந்தையாக சில அதிகாரிகளும் பொலிஸாரும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. நாட்டில் தற்போது நடைபெறும் கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுக்கு மூலக்காரணங்களாக போதைப்பொருள் பாவனையே இருக்கின்றது. இதன்படி ஆளும்தரப்பு போதைப் பொருளை தடுப்பதற்கு அதிகளவான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

ஊழல் எதிர்ப்பு விடயத்தில் விசேட பிரேரணை ஆளும்தரப்பு கொண்டு வர வேண்டும். தனி நபர்கள் சட்டவிரோத சொத்துக்களை சேர்த்தல், நாட்டுக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இது நியாயமானதே. அதேபோன்று அரசியல் கட்சிகளுக்கு வருகின்ற நிதி தொடர்பாகவும், அந்த நிதி எங்கிருந்து வருகின்றது இது எப்படி பயன்படுத்தப்படுகின்றது என்று விசாரணை நடத்த எந்தவொரு நிறுவனமும் செயற்பாடும் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

நாட்டில் ஏற்படும் பிரளயங்கள், பொருளாதார ரீதியிலான பின்னடைவுகள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஆட்சியை கவிழ்ப்பதற்கான சதி முயற்சிகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கு வருகின்ற நிதியும் காரணமாக இருக்கின்றன. மறைமுகமாக வேறு நாடுகளில் இருந்து நிதி கொண்டுவரப்படுகின்றது. இதனை விசாரணை செய்வதற்காக கட்சிகளுக்கு வருகின்ற நிதி தொடர்பில் ஆராய்வதற்காக சட்டமூலமொன்றை கொண்டுவர வேண்டும். இந்த ஆளும்தரப்பு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோருகின்றேன் என்றார்.

## ரூ. 450 மில்லியன் வருமானம் வாகன இறக்குமதி மூலமாக



வாகன இறக்குமதியின் மூலம் ஆளும்தரப்பு எதிர்பார்க்கும் 450 பில்லியன் ரூபா வருமானத்தை இந்த வருட இறுதிக்குள் அடைய முடியுமென திறைசேரி அதிகாரிகள் அரச நிதி பற்றிய குழுவில் தெரிவித்துள்ளனர்.

இந்த வருடம் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் வாகன இறக்குமதி மூலம் 136 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சுங்கப் பிரிவில் இருந்து சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டது தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை அடுத்த வாரம் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.

### கணேமுல்ல சஞ்சீவ கொலையில்

## சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் அடையாளம் காணப்படவில்லை

கணேமுல்ல சஞ்சீவ கொலை சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள துப்பாக்கிச் சூடு நடத்தியதாக நம்பப்படும் சமிந்து தில்ஷான் பியுமங்க என்ற சந்தேக நபர் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் ஆஜர்படுத்தப்பட்டார்.

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.


அடையாளம் காண இரண்டு சாட்சிகள் ஆஜர்படுத்தப்பட்டனர், ஆனால் அவர்கள் சந்தேக நபரை அடையாளம் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் சந்தேக நபர் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலியின் உத்தியோகபூர்வ அறையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சந்தேக நபரை இந்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், அன்றைய தினம் சந்தேக நபரை ஸ்கைப் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் உத்தரவிட்டார்.

## பதில் தர அவகாசம் கேட்பது பதிலைத் தவிர்க்கும் செயல்

### அஜித் பி. பெரேரா எம்.பி. சாடல்




இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பும்போது பதிலளிப்பதற்கு ஆளும்தரப்பு காலவகாசம் கோருகிறது. இதுவரையில் போதுமான காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தொடர்ந்து காலவகாசம் கோருவது கேள்விகளுக்கு பதிலளிப்பதை தவிர்க்கும் ஒரு செயற்பாடாக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித். பி. பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது பிரதமருடனான கேள்வி வேளையின் போது கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய பிரதமர் நரேந்திர மோடி 2025.4.04 ஆம் திகதியன்று இலங்கைக்கு உத்தியோகபூர்வமான அரசமுறை விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எத்தனை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

ஒவ்வொரு ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் என்ன, ? இருதரப்பின் சார்பிலும் கைச்சாத்திட்டவர்கள் யாவர், ஒவ்வொரு ஒப்பந்தத்துக்காகவும் இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி எப்போது பெற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதா, அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரங்களின் பிரதிகளை சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா,

அரசநிர்வாகத்தின் உண்மைத்தன்மையை பேண வேண்டுமாயின் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என்பதை ஆளும்தரப்பு ஏற்றுக்கொள்ளுமாயின் இந்தியாவுடனான ஒப்பந்தங்களை இன்றைய தினம் (நேற்று) நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமா என்றார்.

இதன்போது பிரதமர் சார்பில் எழுந்து பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க முன்வைக்கப்பட்டுள்ள இந்த கேள்விகளுக்கு வெகுவிரைவில் பதிலளிப்பதாக குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா இந்தியாவுடனான ஒப்பந்தம் 2025.04.04 மற்றும் 2025.04.05 திகதிகளில் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் குறித்து ஆளும்தரப்பிடம் பலமுறை நாடாளுமன்றத்திலும், பொது இடங்களிலும் கேள்வியெழுப்பப்பட்டது. ஆனால் இதுவரையில் முறையான பதில் கிடைக்கவில்லை.

இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பும் போது பதிலளிப்பதற்கு ஆளும்தரப்பு காலவகாசம் கோருகிறது. இதுவரையில் போதுமான காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தொடர்ந்து காலவகாசம் கோருவது கேள்விகளுக்கு பதிலளிப்பதைதவிர்க்கும் ஒரு செயற்பாடாக அமையும் என்று தெரிகிறது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் செம்மணி

**யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் மீண்டும் ஒரு புதிய மனிதப் புதைகுழி (mass grave) தோண்டப்படுவதால், முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் தமிழர்களின் கலங்கும் மனநிலை மேலும் பிணைகிறது. இது எளிதில் மறக்கக்கூடிய, சாதாரண ஒரு சம்பவமல்ல. ஒரு மனிதக் குழியின் அகழ்வும் அதன் பின்னணியும், நாடு எதிர்கொள்ள வேண்டிய நீதியற்ற வரலாற்றின் மீதான நேரடி சாட்சி.**

**2019ஆம் ஆண்டில் செம்மணியில் 16 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குப் சேர்ந்தவையாக இருப்பதைக் குறிக்கும் ஆரம்ப கணிப்புகள் வெளியானன. ஆனால், பல ஆண்டுகள் கழிந்தும் அந்த புதைகுழியின் உண்மை குறித்து அரசு அல்லது நீதித்துறையிடமிருந்து எதுவும் உறுதியான வடிவத்தில் வெளிவரவில்லை. தற்போது, மீண்டும் அதே இடத்தில் தோண்டப்படுவதால் பல கேள்விகள் எழுகின்றன: முன்னொரு தடவை நிறைவுக்கு வராத விசாரணை இப்போது எதனால் மீண்டும் தொடங்குகிறது? உண்மையைக் காணத் தயாரான ஒரு ஜனநாயக நாடாக இலங்கை முடிவெடுத்ததா? அல்லது, இது வெளிநாட்டு அழுத்தங்களால் தோன்றும் காலச்சுழற்சி மாதிரியான நடவடிக்கையா?**

**இத்தகைய புதைகுழிகள், இலங்கைப் போர் முடிந்த பிறகும் தொடரும் நீதியின்மையின் வருத்தமிக்க சின்னங்கள். வெறுப்பும் நம்பிக்கையிழப்பும் மட்டுமல்ல, சமூகங்களுக்கிடையே நிலவும் தடைகளை உறுதியாக்கும் காரணிகளுமாக இவை மாறுகின்றன. தமிழர்களின் எதிர்பார்ப்பு ‘ எமது உறவுகள் என்ன ஆனார்கள்?’ என்ற கேள்விக்கு நேரான பதிலை நாடும் உரிமை ’ எப்போதும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில், செம்மணியில் தோண்டப்படும் புதிய புதைகுழி, நீண்டகாலமாக மூடியிருந்த மண்ணுக்குள் புதைந்துள்ள உண்மைகளின் ஓர் அலறலாக பார்க்கப்பட வேண்டும்.**

**இந்த விவகாரத்தில் தேசிய அடையாளங்கள் முக்கியமல்ல; மனித உரிமைகளும், நீதியும் தான் முக்கியம். இத்தகைய புதைகுழிகளைத் தோண்டும்போது, சுயாதீன நீதியியல் நிபுணர்கள், அறிக்கைகள், டி.என்.ஏ. பரிசோதனைகள், மற்றும் பரபரப்பில்லாத நீதிமுறைகள் தேவைப்படுகிறது. வன்முறைக்கு நீதி வழங்குவதன் மூலம் தான் எதற்கும் மன்னிப்பும் நல்லிணக்கமும் வேரூன்ற முடியும். இன்றி, மண்ணுக்குள் புதைந்த எலும்புகள் நிலத்தில் ஊன்றிய தாக்கங்களாக மீண்டும் மீண்டும் வெளிப்படும்.**

**அதிகரித்த வெளிநாட்டு கவனமும் மனித உரிமை அமைப்புகளின் அழுத்தமும், இந்நிலையில் இலங்கை அரசை சற்றே நெருக்கியிருக்கலாம். ஆனால் உண்மையை மண்ணிலிருந்து தோண்டு எடுப்பது மட்டுமல்ல, அதற்கு உரிய பின்விளைவுகள் – குற்றவாளிகளைக் கண்டறிந்து நீதிக்கு முன்னிலைப்படுத்தும் செயல்முறைகளும் தேவையாகின்றன. இல்லையெனில், இது வெறும் காட்சிக்குரிய நாடகமாகவே முடியும்.**

**செம்மணி தற்போது யாருக்காகக் குரலெழுப்பும்? அந்த மண்ணுக்குள் தூங்கும் எத்தனை கதைகள் இன்னும் சொல்லப்படாமல் இருக்கின்றன? உண்மையின் வெளிச்சம் வெளிப்படும் வரை, அந்த மண் அமைதியடையாது.**

# ‘தம்பிக்கு பொது மன்னிப்பு கிடையாது’ ஊடக நிறுவனத்திற்கு அமைச்சர் பதில்

பேச்சுரிமையை தவறாக பயன்படுத்தும் ஊடகத்துக்கு ஒன்றை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்‘ தம்பிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு ஒருபோதும் கிடையாது‘ என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எமது சட்டவாட்சி மற்றும் அமைதி ஆகியவற்றை கோழைத்தனம் என்று நினைத்து எம்முடன் செயற்படுபவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம். தவறிழைத்து விட்டு மன்னிப்பு கோரினால் அதை ஏற்க முடியாது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழலுக்கு எதிராகவே மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். மக்களாணைக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். ஊழலை இல்லாதொழிக்கவும், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை கடுமையாக முன்னெடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஊழல் எதிர்ப்புச் சட்டம் 2023 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இருப்பினும் அந்த சட்டத்தின் செயலாற்றுகைக்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படவில்லை. இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை மேம்பாட்டை கருத்திற் கொண்டு இந்த ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உயர்மட்ட அரசியல் தரப்பினர் மற்றும் அரச அதிகாரிகளின் ஊழல் மோசடியால் இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ளது என்று பல வழக்கு தீர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்குகளுக்கு அமைய மஹிந்தானந்த அளுத்கமகே உட்பட பல அரசியல்வாதிகள் இன்று சிறையில் உள்ளார்கள். மக்களின் வரிப்பணத்தை முகாமைத்துவம் செய்யும் தரப்பினர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று நீதித்துறை அனைவருக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆளும் தரப்புக்கும் இந்த எச்சரிக்கை சாரும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். ஆனால் ஆளும்தரப்பு பொய்யுரைப்பதாக எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கடந்த வாரம் ஊடக சந்திப்பை நடத்தி அரசுக்கு சொந்தமான வாகனம் ஒன்று பெறுமதிக்கு மாறாக குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இந்த கருத்து தொடர்பில் வடமேல் மாகாண ஆளுநர் ஊடக சந்திப்பை நடத்தி பல விடயங்களை குறிப்பிட்டு, உரிய ஆவணங்களை வெளிப்படுத்தி தயாசிறி ஜயசேகர குறிப்பிட்ட கருத்து பொய் என்று உறுதிப்படுத்தியுள்ளார்.

வடமத்திய மாகாண ஆளுநர் சட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிவித்ததன் பின்னர் தயாசிறி ஜயசேகர தான் தவறாக குறிப்பிட்டுள்ளதாக ஊடக சந்திப்பை நடத்தி குறிப்பிட்டு தனிப்பட்ட முறையில் மன்னிப்பு கோரியுள்ளார். ஆகவே யார் பொய்யுரைப்பது என்பதை மக்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். 323 கொள்கலன்கள் தொடர்பில் குறிப்பிடப்படுகிறது. தயாசிறி ஜயசேகர மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

விசாரணைக்கு பின்னர் ஊடக சந்திப்பை நடத்தி மன்னிப்பு கோரினால் அனைத்தும் சரியாகிவிடாது. தவறு செய்ததன் பின்னர் மன்னிப்பு கோரினால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. பொய்யுரைக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் காலம் நிறைவடைகிறது. ஆகவே எதிர்க்கட்சிகள் இனியாவது முட்டாள்தனமான அரசியல் கலாச்சாரத்தில் இருந்து விடுபட வேண்டும்.

எதிர்க்கட்சிகளின் பொய்களுக்கு முன்னுரிமை வழங்கும் ஒருசில ஊடகங்கள் உள்ளன. பொய்களை உண்மையை போன்றே குறிப்பிடுகின்றன. எதிர்க்கட்சியில் இருக்கும் போது பேச்சுரிமையை மதித்து செயற்பட்டோம். இப்போதும் அவ்வாறே செயற்படுகிறோம். எமது சட்டவாட்சி மற்றும் அமைதி ஆகியவற்றை கோழைத்தனம் என்று நினைத்து எம்முடன் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

நீதிமன்றத்தை நான் அவமதித்ததாக எதிர்க்கட்சியின் உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுகிறார். சுமார் 20 ஆண்டுகாலமாக நீதித்துறையில் சேவையாற்றி எனது குடும்பத்தை காப்பாற்றியுள்ளேன். எனது குடும்பத்தாரை வாழ வைத்துள்ளேன். எமக்கு குடும்ப சொத்துக்கள் ஏதும் கிடையாது. பாட்டிமார்கள் சொத்துக்களையும், நிலங்களையும் வழங்கவில்லை. நீதிமன்றத்துக்கு எவ்வாறு மதிப்பளிக்க வேண்டும் என்பதை நான் நன்கு அறிவேன். திரிபுப்படுத்தப்பட்ட செய்திகளுக்கு மாத்திரம் இவர்கள் முன்னுரிமை வழங்குகிறார்கள்.

நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்பதை எதிர்க்கட்சியில் இருக்கும் போது உறுதியாக வலியுறுத்தினோம். ஆட்சிக்கு வந்ததன் பின்னர் சட்டவாட்சியின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தியுள்ளோம். பேச்சுரிமை தவறாக பயன்படுத்தும் ஊடகத்துக்கு ஒன்றை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்‘ தம்பிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு ஒருபோதும் கிடையாது‘ என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தம்பிக்கு பொதுமன்னிப்பு பெற்றுக் கொள்வதற்காகவே இந்த ஊடகம் போலியான குற்றச்சாட்டுக்களை ஆளும்தரப்புக்கு எதிராக முன்வைக்கிறது. எமது ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அந்த தம்பி எவ்வித நோயும் இல்லாமல் வைத்தியசாலையில் இருந்தார். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடுகளுக்கு அமைய தம்பியை மீண்டும் சிறைக்கு அனுப்பியுள்ளோம். ஆகவே சட்டத்தின் ஆட்சிக்கு அமைவாகவே அனைவரும் செயற்பட வேண்டும் என்றார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகயிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு வீட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு வீட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு வீட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது ஆளும்தரப்பின் பிரதான கட்சியாக ஜே.வி.பி உள்ளது. ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையில்பல்வேறுபட்டசெயற்றிட்டங்கள் தொடர்பில்ஜே.வி.பிஆளும்தரப்புஎவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்பது தொடர்பில் நாங்கள் ஆராய வேண்டும். எனக்கு முதலில் நினைவுக்கு வருவது அம்பாந்தோட்டை செயற்றிட்டமே ஆகும். இதனை முன்னெடுப்பதாக இடை நிறுத்துவதா? என்று ஆளும்தரப்பு சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்த செயற்றிட்டத்தின் நிலையியல் தன்மை தொடர்பில் ஆராய வேண்டும். இவ்வாறான செயற்றிட்டங்கள் கடன்களால் நிரம்பியே இருந்தது. இவ்வாறான திட்டங்கள் பொருளாதார விடயங்களில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்று ஆராயவேண்டும். இது ஊழல் மிக்கதாக இருக்கின்றது. 2022ஆம் ஆண்டில் குறிப்பிட்ட ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தபோது எந்தளவுக்கு அந்த செயற்றிட்டங்கள் நாட்டின் பொருளதாரத்தை பாதித்தது என்பதனை புரிந்துகொள்ள முடியுமாக இருந்தது. இதனால் சில விடயங்களை ஆளும்தரப்பு தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்பதுடன், இவ்வாறான செயற்றிட்டங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உருவாக்க வேண்டும்.

இந்நிலையில் நீங்களும் பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும். எதிர்க்கட்சித் தரப்பினால் சில உடன்படிக்கைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று ஆளும்தரப்பிற்கு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. நாட்டின் நலனை கருத்திற்கொண்டு அவற்றை வெளியிட முடியுமா என்று ஆராயலாம். அதேபோன்று செயற்றிட்டங்கள் தொடர்பில் முன்னைய ஆளும்தரப்புகளை குற்றஞ்சுமத்திக்கொண்டிருக்காது. பழைய கதைகளை பேசிக்கொண்டிருக்காது ஆளும்தரப்பு தமது செயற்பாடுகளுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றார்.

## எதிர்க் கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்குஅவர்மேலும்உரையாற்றியதாவது,

நாட்டு மக்கள் ஊழலை இல்லாதொழிக்க வேண்டும் என்று வழங்கிய ஆணைக்குழு அமைய ஆளும்தரப்பு செயற்படுகின்ற நிலையில், ஒருசிலர் கூச்சலிடுகிறார்கள்.இவர்களின் கலக்கத்தை எம்மால் நன்கு அறிந்துக் கொள்ள முடிகிறது.

அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க மற்றும் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோரை இலக்காகக்கொண்டுஎதிர்க்கட்சியினர்பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். 323 கொள்கலன்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் முறையாக விசாரணை செய்யப்படுகிறது. ஆகவேகுற்றச்சாட்டுக்களைமுன்வைத்தவர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலமளிக்க வேண்டும்.

இந்த நாட்டில் பல ஊழல் மோசடியாளர்கள் உள்ளார்கள். வெந்நிற ஆடையணிந்தவர்கள் செய்தஊழல்மோசடிகளால்நாடு வங்குரோத்து நிலையடைந்தது. ஒருசில ஊழல்வாதிகள் தற்போதுசிறையில்உள்ளார்கள்.நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பிற தரப்பினருக்கு விற்பனை செய்த விவகாரம் உலகில் எங்காவது நடந்ததுண்டா. அவ்வாறான சம்பவம் இலங்கையில் நடந்துள்ளது. அந்த நபர் தற்போதும் நாடாளுமன்றத்தில் உள்ளார்.

அரசியல் சாபம், பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும் இனி அரசியலுக்கு வர போவதில்லை என்று ஊடகங்கள் மத்தியில் குறிப்பிட்டு விட்டு பதவி விலகியவர் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு வருகைத் தந்துள்ளார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி உரையாற்றுவதற்கு அனுமதி கோரிய நிலையில் சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் பிரதி தலைவர் அனுமதி வழங்கவில்லை.இதன்போது சமிந்தவிஜேசிறி தவறான வார்த்தைகளை பயன்படுத்தி பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவை விமர்சித்தார்.இதற்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள்.

இதன்போது சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் பிரதி தலைவர், சபையை கட்டுப்படுத்தி விட்டு, சமிந்த விஜயசிறியைநோக்கிதவறான வார்த்தையை பயன்படுத்தியுள்ளீர்கள்,அதனை நீக்கிக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினார.

தொடர்ந்துஉரையாற்றிய பிரதிஅமைச்சர் சுனில் வட்டகல, நான் இவரது பெயரை குறிப்பிடவில்லை. பொதுவாக குறிப்பிட்டேன். ஆனால் இவர் கலக்கமடைந்து தொப்பியை போட்டுக்கொள்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர்பதவியை விற்பனைசெய்வதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வழிமுறை ஏதும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் உள்ளதா என்பதை நீதியமைச்சர் தெளிவுப்படுத்த வேண்டும்.

எதிர்க்கட்சிகள் குறிப்பிடும் பொய்கள் சமூகமயமாக்குவதற்கு இனி இடமளிக்க போவதில்லை. குறுகிய நேரத்துக்குள் பதிலளிக்கப்படும். எதிர்க்கட்சிகளின் பொய்களுக்கு இனி மன்னிப்பு வழங்கப்படமாட்டாது. உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## கடற்படையிடமே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் மீனவர் மீது கடற்படையினர் மேற்கொண்டனர் எனக் கூறப்படும் துப்பாக்கிச்சூட்டில்ஒருவர்காயமடைந்துள்ளார்.

இதுதொடர்பில்அமைச்சரின்கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே சம்பவம் தொடர்பில் அவர் அறிக்கை கோரியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், சட்டவிரோத மீன்பிடி முறையானது கடலுக்கும், நாட்டுக்கும் கேடு விளைவிக்கும். ஒரு சில மீனவர்களின் வருமானத்துக்காக பெரும்பாலானவர்களின் வருமானம் இழக்கப்படுகின்றது.

அதனால்தான் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை தடுக்குமாறு கடற்படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலைசம்பவம்கூட,சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையால் ஏற்பட்டதெனக் கூறப்படுகின்றது. விசாரணைகளின்பின்னரே உண்மை என்னவென்பது தெரியவரும்.

சட்டவிரோதமீன்பிடிநடவடிக்கையும்தவறு, துப்பாக்கிச்சூடு நடத்துவதும் தவறு, அதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதும் தவறு. எனவே, அறிக்கை கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## நீதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பானவிபரங்களைநாடாளுமன்றத்துக்கு வருடாந்தம் சமர்ப்பித்துள்ளேன். ஊழலுக்கு எதிராக கருத்து தெரிவிக்கும் பலர் தமது சொத்து மற்றும் பொறுப்பு விபரங்களை சமர்ப்பிக்கவில்லை.நீதியமைச்சர் பொது இடங்களில் கருத்து தெரிவிக்கும் போது நீதிமன்றத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் பேச வேண்டும்

நீதியமைச்சர் முதலில் நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் மற்றும் வழிமுறைகளை கற்றுக்கொள்ள வேண்டும். பிறிதொரு உறுப்பினர்ஆசனத்தில்அமர்ந்துக்கொண்டு உரையாற்ற முடியாது. முதலில் முறைகளை கற்றுக் கொள்ளுங்கள்.தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு தான் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நளின் பெர்ணான்டோ ஆகியோரை சிறைக்கு அனுப்பியதாக நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்தானந்த அளுத்கமகே விவகாரத்தில் மூன்று நீதியரசர்கள் ஏகமனதாக வழங்கிய தீர்ப்பினை நீதியமைச்சர் சவாலுக்குட்படுத்தியுள்ளார். நீதியரசர்களின் ஆடைகளை நீதியமைச்சர் களைத்துள்ளார்.என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்துள உரையாற்றிய நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, 09 நிமிடமாக நான் குறிப்பிட்ட விடயத்தை ஊடகம் ஒன்று ஒரு நிமிட காணொளியாக திரிபுப்படுத்தியுள்ளது. நான் நீதிமன்றத்தை ஒருபோதும் அவமதிக்கவில்லை. அவ்வாறு அவமதித்திருந்தால் முறைப்பாடளிக்க முடியும். ஆகவே எச்சந்தர்ப்பத்திலும் நான் நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை. பொய்யுரைக்க வேண்டாம்‘ என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய சாமர சம்பத், இந்த நீதியமைச்சர் போலியான பத்திரங்களை சமர்ப்பித்து கலாநிதி பட்டத்தை தனது பெயருக்கு முன்னாள் பதித்துக் கொண்டார். உண்மை வெளிவந்ததன் பின்னர் பட்டத்தை நீக்கிக்கொண்டார். தற்போது நீதிமன்றத்தை அவமதித்துள்ளார். இவருக்கு நிச்சயம் கைதி உடை (ஜம்பர்) அணிவிப்பேன்.

எஸ்.பி.திசாநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் நீதிமன்றத்தை அவமதித்து சிறைச்சென்றார்கள். அதேபோல் என்றோ ஒருநாள் நீதியமைச்சர் நீதிமன்றஅவமதிப்புக்கு சிறைச் செல்வார். என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். என்றொரு நாள் நாங்கள் உங்களுக்கு சிறை கைதி (ஜம்பர்) அணிவிப்போம்.

மஹிந்தானந்த கரம்போட் விநியோகித்ததால் சிறைசென்றுள்ளார். ஆனால் இந்த ஆளும்தரப்பில் குரங்கு அமைச்சர் குரங்கு கணக்கெடுப்புக்கு 100 இலட்சம் ரூபாவை செலவழித்துள்ளார். ஆனால் குரங்குகளுக்கு ஒரு மாம்பழம் கூட வழங்கப்படவில்லை. குரங்குகளின் எண்ணிக்கையும் வெளிவரவில்லை. ஆகவே குரங்கு அமைச்சரை 40 ஆண்டுகள் சிறைக்கு அனுப்ப வேண்டும்.

இந்த ஆளும்தரப்பின் செயற்பாடுகள் அனைத்தும் ஆளும்தரப்புக்கு எதிராகவே அமைகிறது. ‘பிரய்பரி சரணம் கச்சாமி‘ என்று துதி பாடும் நிலைமை ஆளும்தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை பிடித்துக் கொண்டு ஆளும்தரப்பு செயற்படுகிறது. இலஞ்ச ஆணைக் குழுவும் ஆளும்தரப்புக்கு ஏற்றாட் போல் செயற்படுகிறது. எத்தனை நாட்களுக்கு இவ்வாறு செயற்பட முடியும் என்று பார்ப்போம்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் எவருக்கும் நடக்க முடியாது. என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். பிரபுக்கள் பாதுகாப்பாளர்களுக்கு முன்பாக ஜனாதிபதி நடந்துசெல்கிறார். இவ்வாறான ஜனாதிபதியின் உதவியாளர்கள் மாநகர சபையில் தடுக்கி விழுகிறார்கள். கடுவலை மாநகர சபை கூடிய தினத்திலேயே வீழ்ந்துள்ளது. ஜனாதிபதியின் பெயரை இவர்கள் தான் இல்லாதொழிக்கிறார்கள்.

இந்த ஆளும்தரப்பு ஆரம்பத்தில் இருந்து தோல்வியடைந்துள்ளது. நான் இங்கு உரையாற்றிய விடயங்களை கொண்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஏதாவதொரு புதிய வழக்கினை எனக்கு எதிராக தாக்கல் செய்யும். அடுத்த மாதம் என்னை மீண்டும் சிறைக்கு அனுப்புவார்கள். நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்புக்கு எதிராக பேசுபவர்களை நெருக்கடிக்குள்ளாக்க ஆளும்தரப்புமுயற்சிக்கிறது.குரங்குஅமைச்சர், நீதியமைச்சர் மற்றும் போலி கலாநிதி பட்டம் சமர்ப்பித்த முன்னாள் சபாநாயகருக்கும் ஜம்பர் அணிவிக்க முடியும் என்றார்

## செம்மணிப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த மனித எலும்பு எச்சத்தின் மீதுமோ, அருகிலோ ஆடைகளும் காணப்படவில்லை.

இது செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கில் சாட்சியமளித்த சோமரத்ன ராஜபக்சே, வழங்கிய வாக்குமூலத்தில், இராணுவ வாகனத்தில் ஆடைகள் இன்றி அழைத்துவரப்படும்ஆண்களும்பெண்களும் தோண்டப்பட்ட குழிகளின் முன்பாக நிறுத்தப்பட்டு மண்டையில் அடித்துக் கொல்லப்பட்டுவார்கள் என்று தெரிவித்திருந்த விடயத்தோடு பெருந்திப்போக்கக் கூடியதாகத் தற்போது மீட்கப்படும் எலும்புக்கூட்டுத் தொகுதிகள் காணப்படுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நேற்று மூன்று எலும்புக்கூடுகள் முழுமையாக மண்ணிலிருந்து அகற்றப்பட்டு பொதி செய்யப்பட்டன. நேற்றுப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புத் தொகுதியில் ஒன்று ஒரு வயதுக்குக் குறைந்த சிறுவருடையாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சடலங்கள் அனைத்தும் நில மட்டத்திலிருந்து இரண்டு மூன்றுஅடிஆழத்திலேயேகாணப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு சடலமாக அகற்ற அகற்ற அவற்றின் கீழே மேலும் பல மனித எலும்பு எச்சங்கள் வருமோ என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir


# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.06.2025இல் வெளியிடப்பெற்றது